அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026
கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

Dr PRIYAKRISHNAN

Publisher

MR P. JAYAKRISHNAN

Editorial Board Members

Dr V SELVAKUMAR

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

Dr. Ravindran A/L Maraya

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

Dr Silllalee A/L S.Kandasamy

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

Dr. S. KAVITHA

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

Dr.K.DAYANIDHI

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Dr O.MUTHIAH

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

DR UMADEVI

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

DR JAGADEESAN.T.

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

DR SENTHIL PRAKASH.S

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

DR R TAMILSELVAN

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

Dr SWARNAVEL ESWARAN

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

Dr (Ms.) NILANKA LIYANAGE

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Mrs THULSIVANTHANA UDAYASHANKAR

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

Dr B. DHANANJAYAN

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

Dr P.SEKAR

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்

சமுதாய சிந்தனை நோக்கில் கவிஞர் யுகபாரதியின் தெருவாசகம்

Poet Yugabharathi' s Theruvasagam from the Perspective of Social Consciousness

ஆய்வாளர் : ப.பொற்கொடி, முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்) -322PHD23P622TAM, முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் - 635 601,திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது, சேர்காடு, வேலூர் - 632 115.

Scholar B.Porkodi, *Part Time Research Scholar- 322PHD23P622TAM,*

Department Of Tamil, Sacred Heart College(Autonomous), Tirupattur- 635601,

Afiliated in Thiruvalluvar University, Serkkadu, Vellore - 632115.

நெறியாளர் முனைவர் க.மோகன்காந்தி, உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் - 635 601.

Guide: Dr.G.Mohangandhi,*Assistant Professor,Department Of Tamil, Sacred Heart College (Autonomous), Tirupattur -635601,*

Abstract

Poet Yugabharathi is a contemporary poet widely acclaimed by many. Although he has traversed diverse paths ranging from traditional poetry and modern poetry to film lyrics it is a fact known to anyone who has read his poems or listened to his songs that all his creative works are invariably grounded in social consciousness, cultural values, and linguistic enrichment. The book "Theruvasagam" serves as the poet's sixth poetry collection. This research paper aims to analyze the social themes and perspectives embedded within this particular poetry collection.

Keywords: *Poet Yugabharathi - Theruvasagam - Social Thought in Modern Poetry - Perspectives on Marginalized Human Life.*

ஆய்வுச் சுருக்கம்

கவிஞர் யுகபாரதி தற்காலத்தில் பலராலும் போற்றப்படும் கவிஞர். மரபுக் கவிதை, புதுக்கவிதை, திரைஇசைப் பாடல்கள் என பல வழிகளில் பயணம் செய்தாலும் தனது அனைத்துப் படைப்புகளிலும் சமூக உணர்வும், பண்பாடும், மொழி வளர்ச்சியும் சார்ந்ததாக அமையும் என்பதை கவிஞரின் கவிதைகள் மற்றும் பாடல்கள் கேட்ட அனைவரும் அறிந்த ஒன்று ஆகும். 'தெருவாசகம்' எனும் நூல் கவிஞரின் ஆறாவது கவிதைத் தொகுப்பு ஆகும். இந்த கவிதைத் தொகுப்பில் காணலாகும் சமூக சிந்தனைகளை ஆய்வதாக இக்கட்டுரைஅமைகிறது.

திறவு சொற்கள் : கவிஞர் யுகபாரதி - தெருவாசகம் - புதுக்கவிதையில் சமூக சிந்தனை - விளிம்பு நிலை மனித வாழ்வியல் சிந்தனை.

முன்னுரை

யுகபாரதி எனும் பிரேம்குமார், பிறப்பு டிசம்பர் 02, 1976 கவிஞர், எழுத்தாளர், இதழாளர், பதிப்பாளர், திரைப்பாடலாசிரியர். தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றார் யுகபாரதி, பாரதியையும் கம்பனையும் படித்து இலக்கிய ஆர்வம் பெற்றார். தந்தை மூலம் அறிமுகமான இலக்கிய, அரசியல் நூல்கள், சோவியத் யூனியன் புத்தகங்கள் வாசித்து வளர்ந்தார். வாசித்த நூல்களாலும், தந்தையின் நண்பர்கள் மூலம் பெற்ற இலக்கிய அனுபவங்களினாலும் எழுதத் தொடங்கினார். 'ஈழ ஏக்கம்' என்னும் முதல் கவிதை, தமிழர் கண்ணோட்டம் இதழில் வெளியானது. தொடர்ந்து பல இதழ்களில் கவிதைகள் வெளியாகின. பாரதி மீது கொண்ட பற்றால் 'யுகபாரதி' என்ற புனை பெயரில் எழுதினார். 'மனப்பத்தாயம்', 'பஞ்சாரம்', 'தெப்பக்கட்டை' எனப் பல கவிதைத் தொகுப்புகள் வெளியாகின. பல்வேறு இதழ்களில் இலக்கியம் சார்ந்த பல கட்டுரைகளை எழுதினார். யுகபாரதியின் கவிதைகள் தொகுக்கப்பட்டு நூல்களாக வெளியாகின. கல்யாண்ஜி, மகுடேஸ்வரன், மனுஷ்யபுத்திரன், சமயவேல், வித்யாஷங்கர், பசுவய்யா, பழமலய் எனப் பலர் யுகபாரதியைக் கவர்ந்த கவிஞர்கள்.

யுகபாரதியின் 'நடை வண்டி நாள்கள்' கவிதைத் தொகுப்பு மிகுந்த கவனம் பெற்றது. பதினைந்துக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுப்புகளையும், இருபதுக்கும் மேற்பட்ட கட்டுரைத் தொகுப்புகளையும் வெளியிட்டார். தன் வரலாற்று நூல் ஒன்றையும் எழுதினார். இந்நிலையில் எளிய மக்களின் மன வாசகங்களைப் பதிவு செய்யும் கவிதைத் தொகுப்பாக கவிஞரால் படைக்கப்பட்டதே 'தெருவாசகம்' இவற்றில் சமூக சிந்தனைகளை ஆய்வது இவ்வாய்விதழ் ஆகும்.

தெருவாசகம்

இந்தப் பெயரைக் கேட்டவுடன் நாம் அனைவரின் மனதிலும் ஓடும் ஒரு சொல் திருவாசகம். திருவாசகம் இறைவனின் சிறப்புகளை வாசகமாகக் கொண்டவை. கவிஞரின் தெருவாசகமோ தெருக்களில் பணிசெய்வோர், குடியிருப்போர் இவர்களின் மனது வாசங்களைக் கொண்டவை. இதனாலேயே கவிஞர் இக்கவிதை தொகுப்பிற்கு 'தெருவாசகம்' எனும் பெயரினை வைத்துள்ளார். இக்கவிதைத் தொகுப்பில் கரகாட்டக்காரி, பெட்டிக்கடைக்காரன், பூக்காரி, நாற்று நடுவள், பலூன்காரன் என்று தெருக்களுடன் தொடர்புடைய தொழில், மனிதர்கள், பயணம் செய்வார்கள் என்று இவர்களின் மன வாசகங்களைப் பதிவு செய்வதாக இக்கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது.

சமூகத்தில் பெண் தொழிலாளர்கள்

தெருவாசகம் எனும் கவிதைத் தொகுப்பில் கவிஞர் யுகபாரதி 42 தலைப்புகளில் கவிதை எழுதியுள்ளார். அவற்றில் 7 தலைப்புகளில் பெண்கள் பற்றியும் 35 தலைப்புகளில் ஆண்கள் பற்றியதாக கவிதையை அமைத்துள்ளார். தலைப்பும் கவிதை அமைப்பும் சமூகநிலையை ஒட்டியதாக அமைந்துள்ளார். தெருவோர தொழில்களில் ஆண்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால் கவிதை எண்ணிக்கை இவ்வாறு அமைத்துள்ளார். எளிய மனிதனும் புரிந்து கொள்ளும் வகையில் தமது கவிதையை எளிய நடையில் அமைத்துள்ளார். ஏழு தலைப்புகளின் பெண் தொழிலாளர்கள் சமூகத்தில் எந்நிலையில் உள்ளனர் என்பதையும் அவர்கள் மனநிலையையும் நமக்கு கவிஞர் படம்பிடித்து காட்டியுள்ளார்.

கரகாட்டக்காரி

ஆடுகிறாள் அம்பலத்தில் ஆதி சிவன் சிரிப்போடு, காலக்கயிறுகள் சுழற்றுகிறது பம்பரம் போல் என கவிதைத் தொடங்குகிறது. தலையில் பித்தளைப் பூங்கரகம் குட்டப் பாவாடை இடுப்பில் ராட்டினம் அவளின் அரைகுறை ஆடைகளைப் பெருசுகள் கோணல் மானலாக பார்க்கின்றனர். சாவு வீடு, பெரிய மனிதரின் வீட்டு விழாக்கள், கோவில் திருவிழாக்கள், தெருக்கள் என பல இடங்களில் பல பிரச்சனையோடு நடனம் ஆடுகிறாள். இஞ்சி இடை அழகி இங்கு பாரு என குடிகார கூட்டம் அழைக்கிறது. ஆனால் அவளோ காலம் நேரம் தெரியாமல் பசியோடு ஆடுகிறாள். ஆடவர் அணைவரும் அவிழுமா கொக்கி என பார்க்கின்றனர் அவளோ பத்து ரூபாய் ரவிக்கையில் குத்துவார்களா என பார்க்கிறாள்.

“ஆடுகிறாள் அம்பலத்தில்

ஆதி சிவன் சிரிப்போடு

காலக் கயிறுகள்

சுழற்றுகிற பம்பரம் போல்

அவிழுமா கொக்கியென

ஆடவர் பார்த்திருக்க

கிடைக்குமா பத்து ரூபாய்

கேட்கிறது இவள் ரவிக்கை” யுகபா.கவி.ப.356

மீன் காரி

மீனை நாம் உண்கிறோம் மீனால் இவள் உண்கிறாள். குடலை புரட்டும் நாற்றத்தில் நாம் ஒரு நிமிடமும் நிற்பது இல்லை இவள் வாழ்வோ அந்த நாற்றத்தில் தான். தொண்டையில் சிக்கிய முல்லை விட சிக்கலானது இவள் வாழ்க்கை. தராசின் முல்லை விட கூர்மையானது இவள் வாழ்க்கை. மலரின் முள்ளுக்கு இருக்கும் கிராக்கி இவளின் மீன் முள்ளுக்கு இல்லை. தண்ணீரில் முட்டையிடுகிறது மீன் கண்ணீரில் குஞ்சு பொரிக்கிறாள் இவள் என மீன்காரியின் வாழ்க்கைச் சூழலை படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் அவை,

“மீனை நாம் உண்கிறோம்

மீனால் இவள் உண்கிறாள்

என்பது போன்ற

நாளாந்தர முரண்களில்

அளக்கக்கூடாது இவளை

தண்ணீரில்

முட்டையிடுகிறது மீன்

கண்ணீரில்

குஞ்சு பொரிக்கிறாள் இவள்" யுகபா.கவி.ப 362

பூக்காரி

கற்றது கையளவு என்பது இவள் கோட்பாடு. வற்றிய முகத்தோடு வாழ்ந்து வரும் பூக்காடு. காம்பு கிள்ளி இவளின் கைகள் காய்த்துள்ளது. துன்பம் தீரும் என்று பலரும் கோயிலுக்கு வருகின்றனர் இவளோ நாள் முழுதும் கோயிலில் இருக்கிறாள், இவள் துன்பங்கள் தீர்ந்தபாடில்லை. இவள் மனமான பூக்களை வீடு வீடாக கொடுத்துவிட்டு சாராய நெடியடிக்கும் புருஷனிடம் வாழ்கிறாள். சில்லறை தருவது போல் பல ஆண்களின் விரலுரசும். கவலைக்கு எல்லாம் தாயாக இவள் இருந்தும், வாழ்க்கையைத் தொடருகிறாள். வருபவருக்கு எல்லாம் பூ கொடுக்கும் இவளுக்கு பூ கொடுக்க ஒருவரும் இல்லை.

"கற்றது கையளவு

என்பதிவள் கோட்பாடு

வற்றிய முகத்தோடு

வாழ்ந்து வரும் பூக்காடு

வகைக்கொரு பூப்பறித்து

வருபவர்க்குக் கொடுத்தாலும்

இவளுக்கு இதுவரைக்கும்

ஏவருமில்லை பூக் கொடுக்க" யுகபா.கவி. ப 366

குறி சொல்பவள்

அருள்வாக்கு தேடும் மனிதர்களில் பொருள் வாக்கு சொல்லும் இவள் ஒரு பெண் பா. இவளின் அகராதியின் முதல் சொல் ஆத்தா மகமாயி வை கண்ணை என்பதுதான். கையில் ஒரு கோல் இருக்கும் காலத்தை அளப்பதற்கு. பொய்யிலிவள் வாழ்விருக்கும் முகத்தில் மஞ்சள் அகல பொட்டு. உரைப்பதெல்லாம் வெற்றிலையின் உமிழ்நீர். சுக்கிர திசை என்பாள், குரு திசை என்பாள் கூறுவது எல்லாம் தட்சணைக்கு. நினைத்தது நடப்பதில்லை நினைக்காமல் கிடைப்பதில்லை. ஜாக்கிரதை அறிவுரை பிறருக்கு மட்டும்தான். என குறி சொல்பவள் வாழ்க்கையை அழகாக பதிவு செய்துள்ளார் கவிஞர். சமூகத்தில் பெண் தொழிலாளர்கள் அனுபவிக்கும் துன்பம், கடின சூழ்நிலை, வாழ்க்கை போக்கு என தனது எதார்த்த பாணியில் பதிவு செய்துள்ளதை மேற்கண்ட கவிதையின் வாயிலாக அறிய முடிகிறது.

சமூக மனநிலை

சமூகத்தில் பல தொழில்கள், பணிகள் என பல உள்ளனர். மக்கள் பெரும்பான்மையாக பெரிய பணியில் உள்ளவர்களை வியந்தும் அவர்கள் பணிச்சுமைகள் துன்பங்கள் பற்றி பேசுவதை பலர் பல இடங்களில் கண்டிருப்பர். ஆனால் ஒரு பெட்டிக்கடைக்காரனின் பணி மற்றும் மனநிலை பற்றி பேசி எவரும் கேட்டதில்லை. அனைவரும் இளங்கோவடிகளாக எண்ண முடியாது. ஆனால் கவிஞர் சிறு தொழில் செய்பவர், தெருக்கடைக்காரன் என எளிய மக்களின் மன வாசகத்தை தெருவாசகம் எனும் கவிதைத் தொகுப்பாக படித்துள்ளார்.

பெட்டிக்கடைக்காரன்

பெட்டிக்கடை வைத்திருப்பவனின் ஆரம்பகால இலட்சியம் நிச்சயமாக பெட்டி கடை வைப்பதாக இருந்திருக்காது. பெரிய பணிகளும், சிறிய பணிகளும் எப்போதும் பிடித்த மாதிரி மட்டுமே இருக்காது. சில சமயங்களில் மனசங்கடத்தை ஏற்படுத்த கூடியதாக இருக்கும். புகையிலை பண்டலை விற்பது, பீடி புகைப்பவனுக்கு தீப்பெட்டி தருவதும், என கனவிலும் நினைத்திருக்க மாட்டார். குலையில் கன்றிபோன வாழைப்பழத்தை வீட்டிற்கு எடுத்துச் செல்வோம் என எண்ணியிருக்க மாட்டார். மட்டை ஊறுகாயும், கடலை மிட்டாயும் தமது வாழ்க்கைக்கு பணமீட்டும் எனவும் எண்ணியிருக்கமாட்டார். என பெட்டிக்கடைக்காரனின் மன வாசகத்தை கவிதையாக வடித்துள்ளார்.

“பெட்டிக்கடை வைத்திருப்பவனின்

ஆரம்ப கால இலட்சியம்

நிச்சயமாக பெட்டிக்கடை

வைப்பதாக இருந்திருக்காது

பெட்டிக்கடை வைத்திருப்பவன்

பெட்டிக்கடையோடு தனது

லட்சியத்தை

முடித்துக் கொள்வதும் மில்லை" யுகபா.கவி. ப.358

போஸ்டர் ஒட்டுபவன்

போஸ்டர் ஒட்டுவது ஒரு தொழிலா? என சமூகத்தில் கேள்வி கேட்டால் பலரது பதில்! இல்லை என்பது, ஆனால் அது தவறு, போஸ்டர் ஒட்டுபவனும் ஒரு மனிதன், அவனுக்கு என ஒரு மனம் உள்ளது. அந்த தொழிலிலும் துன்பங்கள் உள்ளது என கவிஞர் கூறுவதைக் காணலாம்.

ஊரடங்கும் நள்ளிரவில் தகவலை தெரிவிக்க சுவரொட்டியை ஒட்டுகிறான், நடமாடும் பேய் போல திரிகிறான். முக்குச்சந்துகளில் மூச்சு முட்ட ஓட்டுகிறான். ஊரோடு ஒட்டி வாழ்த்தல் எனும் தத்துவத்தை இரவில் நடைமுறைப்படுத்துபவன். நீச்சல் உடை அணிந்த நிர்வாண அழகிகளைக் கொஞ்சிடாமல் ஒட்டுகிறான். ஒவ்வொரு நாளும் இன்றோடு முடிகிறது என எண்ணி ஒட்டியும் இப்படியே வாழ்க்கை நகர்கிறது. இவனோடைய கைரேகை எல்லா சுவர்களிலும் இருக்கும். மக்கள் சுவரொட்டியைக் காணுகின்றனர் அதன்பின் மறைந்துள்ள இவன் கவலையைக் காண்பது இல்லை இதனை,

"ஊரடங்கும் நள்ளிரவில்

ஒட்டுகிறான் சுவரொட்டி

தான் மட்டும் உறங்காத

தகவலையும் தெரிவிக்க

ஊரோடு ஒட்டி வாழ்தல்

உயர்வினும் தத்துவத்தை

ராவோடு ராவாக

நடைமுறைப் படுத்துகிறான்

இண்டு இடுக்கெல்லாம்

இருக்குமிவன் கைரேகை

கண்டு செல்பவர்கள்

காண்பதில்லை கண்ணீரை” யுகபா.கவி. ப.360

பலூன்காரன்

கிராமத்துத் திருவிழாக்கள், நகரத்துப் பண்டிகை என்றால் பலூன் என்ற ஒன்று இல்லாமல் இருக்காது. இந்த காட்சி நாம் அனைவரும் பார்த்த ஒன்றுதான் ஆனால், பலூனைப் பற்றி சிந்தித்த நாம் பலூன்காரன் பற்றி சிந்தித்தது இல்லை. இந்நிலையிலேயே கவிஞர் நம்மிலிருந்து வேறுபடுகிறார்.

மாதக் கடைசி இல்லை, மாதமெல்லாம் கடைசி என்று ஊதி பெருக்குகிறான், உள்ளிருக்கும் வேதனையை. ஓதுவதால் பயனில்லை என ஊதுகிறான் உயிர் மூச்சை. குழலூதும் கண்ணனும் ஊதுகிறான், இவனும் ஊதுகிறான். கண்ணன் தேடுவது கோபியரை, இவன் தேடுவது குழந்தைகளை. இடைவிடாது இவன் ஊதி எடுத்து வரும் ரூபாயில், அடுப்பூத தொடங்கும் அவன், அரைவயிற்று பட்டினிக் குடும்பம். பேசுகிற இவனுக்குள் பிரியங்கள் பலியாடு, பூசலுக்குள் வாழ்வதால் தேசத்தின் குறியீடு.

ரோடு ரோலர் டிரைவர்

முன்னும் பின்னமாக இவன் கடந்த தூரம் கணக்கில் வராதது. இவனை ஒரு தத்துவமாக கவிஞர் கூறுகிறார். ரோலர் ஓட்டுபவனைப் போல அரசு இயங்க வேண்டும், முன்னதில் தெளிவும், பின்னதில் பதிவும். எல்லா சாலையும் செம்மை அடையுமா? தெரியாது ஆனால், ரோலரை அடையும். விரைவு வாகனம் விபத்தின் அடையாளம் ஆனால், எங்கேயும் நிறுத்தலாம் ரோலரை எந்த பயமும் இல்லாது. வந்த பாதையை மறக்காதவன் வாழ்வில் வேகமாக முன்னேறுபவான் என்பர் ஆனால், வந்த பாதையை மறக்காத இவனோ நினைத்தாலும் போக முடிவதில்லை வேகமாக.

“முன்னும் பின்னுமாக

இவன் கடந்த தூரம்

மிக மிகச் சொற்பம் அல்லது

கணக்கில் வராதது

வந்த பாதையை மறந்துவிடாத

இவனே விரும்பினாலும்

போக முடிவதில்லை வேகமாக” யுகபா.கவி. ப.380

பாத ரட்சகன்

கோவில்களுக்கு சென்றால் அல்லது உயர்ந்த இடத்திற்கு சென்றால் பாத ரட்சகன் ஒருவன் இருப்பான். நமது செருப்புப் பற்றி சிந்தித்த அளவுக்குக் கூட அவனைப் பற்றி நாம் நினைத்தது இல்லை. அவன் மன வாசகத்தை கவிஞர் கூறுகிறார்.

உன்னுடைய செறுப்பாகி உழைப்பேன் நான் அயராமல், என்பவரில் எவரேனும் இவனாக நினைத்தோமா! காலனியின் புழுதிகளைக் கைக்கொண்டு நீக்கும் இவன் தோலுரசும் அடுக்குகளைத் துளியேனும் துடைத்தோமா! அரியணையில் செருப்பு வைக்க அனுமதித்தோம், ஒரு பொழுதேனும் இவன் உயிர் வலியை அறிந்தோமா! காரியம் முடிந்தவுடன் கால் பிடிக்கும் காலகட்டத்தில், வாரறுந்த செருப்பு இவன் வாழ்வுக்கு தாய் போல. என்றேனும் இவனை மதித்தோமா! எதையேனும் கொடுத்தோமா! நண்பனாகி இவனுடைய நலம் கேட்டு நடந்தோமா! விலைமிகுந்த செருப்புகளை வீட்டுக்குள் வைப்போரே, கலை மிகுந்த இவனை நாம் காதலிக்க மறந்தோமா.

"உன்னுடைய செருப்பாகி

உழைப்பேன் நான் அயராமல்

என்பவரில் எவரேனும்

இவனாக நினைத்தோமா

விலைமிகுந்த செருப்புகளை

வீட்டுக்குள் வைப்போரே

கலை மிகுந்த இவனிடம் நாம்

காதலிக்க மறந்தோமா" யுகபா.கவி. ப.400

முடிவுரை

இது திருவாசகம் போன்று பக்தியை பேசும் நூல் அல்ல, தெருக்களில் வாழும் மக்களின் வாழ்வைப் பதிவு செய்யும் நூல். தெருமக்களின் எளிமையான வாழ்வு போல கவிஞர் கவிதை நடையை சந்தத்துடன் சேர்த்து எளிய நடையில் அமைத்துள்ளது சிறப்பாகும்.சைக்கிள் டீக்காரன்,மின் கணக்காளன், உதவி இயக்குனர், அடகுக் கடைக்காரன், மேஜை துடைப்பவன், ஆன்மீக வியபாரி, தோட்டக்காரன், கசையடிக்காரன், கிளி ஜோசியன், பாம்பாட்டி, நடத்துநர், தபால்காரன் என பல தொழில்களைப் பட்டியலிட்டு சமூகத்தில் எந்நிலையில் உள்ளது என்று சமூக சிந்தனையோடு அவர்களின் மன வாசகத்தைப் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

துணைநூற்பட்டியல்

1.யுகபாரதியின் கவிதைகள் மனப்பத்தாயம் முதல் மராமத்து வரை, நேர்நிரை பதிப்பகம், 181, இரண்டாம் தளம், ஆழ்வார்திருநகர், சென்னை — 600087.(முதல் பதிப்பு ஆக்டோபர் 2019).

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com